திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி, வருஷநாடு பகுதிகளில் மரங்கள் பயிரிடப்படுவதால் பேப்பர் தொழிற்சாலை ஒன்றை அங்கே அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வருஷ நாட்டு நிலங்களை இப்பொழுது சொந்தமாக்கப் போராட்டம் நடந்து வருகிறது. அதைப்பற்றித்தான் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

திரு. ஜே ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் டயர், டியூப் போன்ற இரப்பர் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளான இரப்பர் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கே இரப்பர் பேக்டரி அமைக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு செ. மாதவன் : இது பேப்பர் தொழிற்சாலையைப்பற்றிய வினா. அந்தப் பகுதியிலே யாராவது அதுபோன்ற முயற்சியெடுக்க முன்வந்தால் அரசாங்கம் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த பேப்பர் தொழிற்சாலைக்கு யாருக்காவது உரிமம் வழங்கப்பட்டு திரும்பப் பெற்றிருக்கிறதா, அப்படியானால் விவரம் என்னவென்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. எம் தேவராசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் ஏராளமாக மூங்கில் கிடைக்கிறது. அங்கே பேப்பர் தொழிற்சாலை அமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

கோவை மாவட்டத்தில் சிமிட்டித் தொழிற்சாலை

***75. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலுக்காக்களில் சிமிட்டித் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராயும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், டால்மியாபுரத்தில் அரசாங்கம் ஆரம்பித்த பைலட் ப்ராஜக்ட்டில் லாபமா அல்லது நஷ்டமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பைலட் ப்ராஜக்ட் என்று அவர்களே கேட்டு விட்டதால் லாப நஷ்டம் என்று அதிலே இருக்காது. புதிய முறை ஆராய்ச்சி செய்யப்பட்டது.

1971 ஜூன் 28]

ஆராய்ச்சி வெற்றியடைந்தது என்ற முடிவுக்கு வரப்பட்டது. ஆராய்ச்சியின் பயனாக தமிழ்நாட்டுக்குப் பயன்படாது என்ற முடிவுக்கு வந்து இப்போதைக்கு உற்பத்தி செய்வதை நிறுத்தி வைக்கலாம் என்ற முடிவை எடுத்திருக்கிறோம்.

திரு கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே. சாத்தூர் அருகில் சமீபத்தில் துவக்கப்பட்ட சிமெண்ட் பேக்டரி எந்த முறையில் செயல்படுகிறது? எந்த அளவிற்கு உற்பத்தி செய்கிறது? ரேட்டெட் கேபாசிட்டியில் எப்பொழுது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆலங்குளம் பேக்டரி பற்றிக் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அது இப்பொழுது தொடங்கி, நடந்து வருகிறது. இரண்டு கில்ன்கள் போடப்பட்டிருக்கின்றன. இரண்டும் உற்பத்தி தொடங்கியிருக்கிறது. இருக்கின்ற பிரச்னையெல்லாம் உற்பத்தி செய்யும் சிமெண்டுக்குச் சந்தை கிடைப்பதிலே தகராறு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தொழிற்சாலை அதிகம் இல்லாததால் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை அங்கு துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகும் சிமெண்டை வெளி மாநிலங்களுக்குச் சென்று விற்கவும், வெளிநாட்டிற்கு அனுப்பவும் இக்கட்டான நிலையில் இருக்கிறோம். இப்போதைக்கு நம்முடைய அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு விலைக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். இதை எடுத்து விட்டால் நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகும் சிமெண்டிற்கு விலை கிடைக்கும் வாய்ப்பில்லாமல் போகும். ஆகவே இப்போதைக்கு மேலும் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவதாக இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, ஆலங்குளம் சிமெண்ட் தரமான சிமெண்டாக இருப்பதால் அரசாங்கத்திற்குச் சொந்தமான காரியாலயங்களில் அத்தகைய சிமெண்டைப் பயன்படுத்த வேண்டுமென்றும், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்கள் கட்டிடங்கள் கட்டும்பொழுது இந்தச் சிமெண்ட்டைப் பயன்படுத்த வேண்டுமென்றும், அதேநோக்கில் விளம்பரம் செய்யப்பட வேண்டுமென்றும் இந்த அரசு உணர்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உற்பத்தி செய்வதற்குத்தான் நமக்கு உரிமை. அதை விற்க நமக்கு உரிமை இல்லை. அந்த உரிமை மத்திய அரசுக்கு இருக்கிறது. யார் யாருக்கு அலாட் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் விற்க வேண்டும். இந்த அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று மத்திய சர்க்கார், ஆலங்குளம் சிமெண்ட்டிற்குத் தேக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள உதவி செய்கிறது.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, காங்கேயம், தாராபுரம் பாதையில் ஊதியூர் மலை என்று இருக்கிறது. அந்த மலையில் கிடைக்கும் கற்கள் சிமெண்டிற்குத் தேவையான சிறந்த கற்கள் என்று நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, சிறிய முறையிலே அந்த இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலங்குளத்தில் பெரிய தொழிற்சாலை ஆரம்பித்தே இப்பொழுது கஷ்டப்படுகிறோம். எனவே, சிறிய தொழிற்சாலைக்கு இப்பொழுது செல்ல வேண்டாமென்று நினைக்கிறோம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : சார் உற்பத்தியாகும் சிமெண்டிற்குச் சந்தை கிடைக்கவில்லை என்று கவலைப்பட்டார்கள் அமைச்சரவர்கள். ஆகவே, அந்தச் சிமெண்டைக்கொண்டு தமிழ் நாடு பூராவும் சிமெண்ட் ரோடு போட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்கள் அதிகமாக ஆசைப்படுகிறார்கள். அப்படிப் போடுவதற்குத் தேவையான பணம் கிடைக்கும்பொழுது அதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் மூலப்பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கிறது. இதை ஆராய்ச்சி செய்து அங்கே சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா மாவட்டத்திற்கும் நான் சொன்ன பதில் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

வாணியம்பாடியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :

'I move that the business of the House do stand adjourned to discuss about a matter of urgent public importance, namely, the police firing in Vaniyambadi on the evening of 27th June 1971.'